**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 16/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW–11</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணசாமி | தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of December 10th, 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தென்காசி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் தென்காசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 30.03.2022ம் தேதி, 19.45 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று ரவி என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து, நிலையம் 21.00 மணிக்கு வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.179/2022, சட்டப்பிரிவுகள் 341, 294(பி), 324, 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.11 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.12.11 13:17:24 +0530